**தோட்டக்கலை துணை இயக்குநர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திருமதி.யோ.ஷீலாஜாண், பி.எஸ்சி., (தோ.) எம்.பி.ஏ.,**

**திருவள்ளுவராண்டு 2055/குரோதி/ஆவணி 19-ம் நாள்**

**செ.மு.ஆ.எண். அ1/10477/2023**

**நாள் 04.09.2024**

**பொருள் :** பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி-IV-ல் அடங்கிய பணிகளுக்கு 24.07.2022 அன்று நடைபெற்ற நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது – தோட்டக்கலை துணை இயக்குநர், நாகர்கோவில் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணியில் சேர்ந்து கொண்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

**பார்வை :**
1) வேளாண்மை ஆணையர், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி5/92705/2023, நாள் 08.12.2023.
2) இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி2/24910/2023, நாள் 14.12.2023.

.....................

**ஆணை-**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1 மற்றும் 2-ல் காணும் செயல்முறை ஆணைகளை தொடர்ந்து, நாகர்கோவில், தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திருமதி.செ.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பணியினை தனியர் பணியேற்ற நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் / முகவரி | பிறந்த தேதி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.செ.மகேஸ்வரி | 03.01.1988 | 21.12.2023 மு.ப. | 21.12.2023 மு.ப. |

இவர் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி-34, இணைப்பு-5-ன்படி, இவர் தகுதிகாண்பருவத்தில் வைக்கப்பட்ட நாளில் இருந்து இரண்டாண்டு காலத்திற்குள் அரசு அலுவலருக்கான பவானிசாகர் பயிற்சியினை நிறைவு செய்திட வேண்டும் எனவும், தகுதிகாண்பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படுமென தெரிவித்து உத்தரவிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்,
நாகர்கோவில்.

**பெறுநர்**

திருமதி.செ.மகேஸ்வரி,
இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல்-இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை.
அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது,

நகல்-இருப்புக்கோப்பு / பணிப்பதிவேடு